**செய்தி வெளியீடு எண்:474** **நாள் : 19.09.2014**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் இன்று **(19.9.2014)** தலைமைச்செயலகத்தில் சென்னை ஆவின் இணையம் மற்றும் பால்வளத் துறை அதிகாரிகளுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு பால்வளத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு பால்வளத்துறை ஆணையர் / ஆவின் மேலாண்மை இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி **2–ம்** வெண்மைப்புரட்சியை எய்தும் வகையில் தமிழகத்தில் ஆவின் நிறுவனம் மற்றும் பால்வளத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்கள் நலனையும் கருத்தில் கொண்டு அறிவித்துள்ள பல்வேறு பால்வளத்திட்டங்களின் தற்போதைய செயல்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் **65** கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு **2** இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை மற்றும் நாளொன்றுக்கு **20** மெட்ரிக் டன் பால்பொடி தயாரிக்கும் தொழிற்சாலையில் சோதனை ஓட்டம் நடைபெற்றுவரும் நிலையில் இந்த தொழிற்சாலையை விரைவில் வர்த்தக ரீதியான பயன்பாட்டிற்குக் கொண்டுவர எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு விரைவாக செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பாடலூர் கிராமத்தில் ரூபாய் 36.28 இலட்சம் செலவில் நளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன் புதிதாக அமைய உள்ள பால்பண்ணையின் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரையறுக்கப்பட்ட காலத்தில் பணிகளை முடிக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொளள வேண்டும் என்று கூறினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் விதி எண். 110-ன் கீழ் அறிவித்துள்ள திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து இத்திட்டங்களை குறிப்பிட்ட காலங்களில் திட்டமிட்டபடி முடிக்கப்படவேண்டியதின் அவசியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணம் குறிப்பிட்ட காலங்களில் காலதாமதம் இன்றி வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

வரும் பண்டிகை காலங்களை முன்னிட்டு ஆவின் நிறுவனம் நுகர்வோரைக் கவரும் வண்ணம் புதிய பால் பொருட்களை தயார் செய்து அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பால்வளத்துறை துணை ஆணையர் திரு எஸ். துரைசாமி, பொது மேலாளர் (நிர்வாகம்) திரு பி.பிரபாகர், பொதுமேலாளர் (திட்டம்/பொறி) திரு சி.லோகிதாஸ், பொது மேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே. கதிர்வேலு பொது மேலாளர் (நிதி) திரு சி. ரவி மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**